**<u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No.. 164/2017 தேதி- 19.02.2026

(P..W.1) . சர்ச்சில்

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது குடும்பத்தில் ஏற்பட்ட பாகபிரிவினை சமயத்தில் நான் இருந்தேன். பாகப்பிரிவினைப்படி எனக்கு சி பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்டது. எந்தெந்த சர்வே நம்பர் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. எத்தனை அயிட்ட சொத்துக்கள் எனக்கு ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு சரியாக தெரியாது. 5 அயிட்ட சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். றீசர்வே எண் 638/7 ல் எனக்கு 2 வது கண்டம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் மேற்கு பக்கம் கருங்கல் குளச்சல் ரோடு என்றால் சரிதான். றீசர்வே எண் 638/8 ல் எனக்கு 2 வது அயிட்டம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் 638/8 சர்வே எண் 638/7 க்கு கிழக்கே உள்ளது என்றால் சரிதான்.

சர்வே எண் 638/8 க்கு கிழக்கு பக்கம் றீசர்வே எண் 636/13 என்றால் சரிதான். றீசர்வே எண் 636/13 ல் எனக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்றால் 12 சென்ட் ஒதுக்கப்பட்டது. றீசர்வே எண் 636/13 ல் 32.5 ஏர் 79 சென்ட் என்றால் சரிதான். றீசர்வே எண் 638/7 க்கு கிழக்கே உள்ள ரோடு வழியாக றீசர்வே எண் 636/13 வரை எனது கண்டம் உள்ளது என்றால் சரியல்ல எனது அண்ணனுக்குள்ள கண்டம். எனது அப்பா பாகப்பிரிவினை ஆகும் முன் விற்பனை செய்த சொத்தை வா.சா.ஆ. 1 ஆவணத்தில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான்.

எனது அப்பா எவ்வளவு சொத்தை விற்பனை செய்தார் என்று எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தது எனக்கு தெரியும். இந்த வழக்கில் 2 ஆம் பிரதிவாதிக்கு எனது அப்பா எத்தனை சென்ட் சொத்தை விலைக்கு கொடுத்தார் என்றால் 2 சென்ட் கொடுத்தார். என் அப்பா உயிருடன் இருக்கும்போது 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துவிட்டார். மேற்படி இடத்தை வா.சா.ஆ. 1 ஆவணத்திலுள்ள வரைபடத்தில் காண்பிக்கவில்லை என்றால் அது தேவையில்லை அதனால் காண்பிக்கவில்லை. வா.சா.ஆ. 1 ஆவணத்திலுள்ள 636/11 வரைபடத்தில் பிளாட் நம்பர் 2 ல் இந்த வழக்கிலுள்ள 2 ஆம் பிரதிவாதியின் சொத்தை சேர்த்து காட்டியுள்ளோம் என்றால் சரிதான்.

நீசர்வே எண் 636/11 சர்வே சொத்திலுள்ள அனைத்து உரிமையாளர்களையும் இந்த வழக்கில் கட்சி சேர்த்தால்தான் வழிப்பாதை அவகாசத்தை கண்டறிய முடியும் என்றால் சரியல்ல. வழிப்பாதை எனக்கு மட்டும்தான் உரிமைப்பட்டது. வழிப்பாதைக்கு தெற்கு பக்கம் இருக்கும் ரோடு எத்தனை அடி வீதி கொண்டது என்றால் 15 அடி இருக்கலாம். வா.சா.ஆ. 1 பாகப்பத்திரம் ஏற்படுத்தும் முன்பே மேற்படி ரோடு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் 15 அடி கொண்ட ரோட்டை இடைவெளி என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் முன்பு மண்ரோடாக இருந்தது தற்போது தார்ரோடாக மாற்றப்பட்டது.

நீசர்வே எண் 636/13 ல் எனது வீடு உள்ளது. எனது வீட்டிற்குள்ள பிளான் அப்ரூவலை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் தெற்கு பக்கம் 5.5 லிங்ஸ் வீதி கொண்ட பாதை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 5.5 லிங்ஸ் பாதை வா.சா.ஆ. 1 வரைபடத்தில் எங்கு காட்டப்பட்டுள்ளது என்றால் 5 லிங்ஸ் பாதை காண்பிக்கப்பட்டுள்ளது. நீசர்வே எண் 636/13 ல் உள்ள அனைத்து சொத்துக்களையும் அளந்தால்தான் மேற்படி 5.5 லிங்ஸ் பாதை இருப்பதை கண்டறிய முடியும் என்றால் நீதிமன்ற ஆணையர் 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகளின் சொத்தை அளந்த பின்பு 5.5 லிங்ஸ் பாதைஇருப்பதை கண்டறிந்தார். ஆணையரை வா.சா.ஆ.1 ல் இருக்கும் வரைபடத்தின் அடிப்படையில்தான் அளக்க சொன்னேன் என்றால் சரிதான்.

ஆணையர் 5.5 லிங்ஸ் பாதை என காண்பித்திருப்பது தவறு அது பிரதிவாதிகள் சொத்தையும் உள்ளடக்கியது என்றால் சரியல்ல. நீசர்வே எண்கள் 636/9, 10, 11, 12 ஆகிய உரிமையாளர்களை வழக்கில் சேர்த்தால்தான் பாதை உரிமையை கண்டறிய முடியும் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி 1988 ஆம் ஆண்டே விலைக்கு வாங்கி காம்போண்ட் சுவர் கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு உரிமைப்பட்ட சொத்தையும் சேர்த்து எனக்கு 5.5 லிங்ஸ் பாதை இருப்பதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதிக்கு எனது அப்பா விற்பனை செய்த சொத்தைவிட அ திகமாக உள்ளது. பிராதில் வழக்கு பட்டிகை சொத்து குறித்த விபரங்களை நான் சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

நான் இந்த வழக்கில் வா.சா.ஆ. 1 வரைபடத்தின்படி பின்பு ஆணையர் அறிக்கையின்படியும் மாறுதலான அளவுகளுடன் கூடிய பாதை கேட்கிறேன்

என்றால் சரியல்ல. நான் பாதையாக கேட்பது நடைபாதைதான் அது தற்போதும் உள்ளது என்றால் 2 ஆம் பிரதிவாதியின் ஆக்கிரமிப்புபோக மீதி பாதை நடைபாதையாக இருந்து வருகிறது. மேற்படி நடைபாதை தெற்கு பக்கத்திலிருந்து வடக்கு பக்கம்வரை ஒரே வீதிகொண்ட பாதையாக இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி ஆக்கிரமித்திருப்பதாக நான் கூறியிருப்பதை நீசர்வே எண் 636/13 ல் உள்ள எல்லா உரிமையாளர்களையும் சேர்த்தால்தான் ஆக்கிரமிப்பை கண்டுபிடிக்க முடியும் என்றால் அவர்களை தரப்பினர்களாக சேர்க்க தேவையில்லை. நான் போட்ட வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் நான் கேட்டிருக்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.